அவ்விதிகள் பேரவைத் துறை வெளியிடும் வெளியீடுகளுக்கு மட்டுமே பொருந்துவதாகும். மாண்புமிகு உறுப்பினர் யாரேனும் தாம் இம்மன்றத்தில் ஆற்றிய உரையைத் தாமாகவே வெளியிட்டுக் கொள்வதற்கு இவ்விதிகள் பொருந்தா. பேரவைத் துறை வெளியிடும் போது அவ்வுரை ஆற்றிய உறுப்பினருக்கு அளிக்கும் பாது காப்பு அவ்வுரையை அவரே வெளியிட்டுக்கொள்ளும்போது அளிக்கப் படமாட்டாது என்பதல்லாது தாமாகவே வெளியிட்டுக்கொள்ளக் கூடாது என்று ஆணையிட இப்பேரவைக்கோ இப்பேரவைத்தலைவருக்கோ அதிகாரம் இல்லை. இதுகுறித்து சர் எர்ஸ்கின் மே அவர்களின் "பாராளுமன்ற நடைமுறைகள்", பற்றிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள சில கருத்துகள் இவை.

"..........Although the privilege of freedom of speech protetcs what is said in debate in either House, this privilege does not protect the publication of debate outside Parliament. Nor does an order of the House for their printing and publication confer parliamentary privilege on proceedings published outside Parliament. A Member who publishes his speech made in either House separately from the rest of the debate is responsible for any libellous matter it may contain under the common law rules as to defamation of character.........."

"..........If a Member publishes his speech, his printed statement becomes a separate publication, unconnected with any proceedings in Parliament.........." என்று இருக்கிறது.

எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சனைகளை நான் தள்ளுபடி செய்கிறேன்.

(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே "தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் 183-வது விதியின் கீழ், 1975-76ஆம் நிதியாண்டிற்கான அவையுரிமைக் குழுவின் உறுப்பினராக இருக்கும்படி, பதினைந்து உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந் தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.